திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலத்தையும் கட்டிடத்தையும் ஆயக்குடி பேரூராட்சிக்கு சொந்தமாக்க கோரிக்கை இருக்கும்போது ஒரு தனி நபருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவசரமாக பேரூராட்சிக்குத் தேவையென்று கேட்கும்படியான நேரத்தில் அவரிடமிருந்து வாங்கி கையகப்படுத்த முடியாத நிலைமையில் அரசு தரப்பிலேயே சிலர் தடை செய்வதாக சொல்கிறார்கள். ஒரு தனிநபரிடமிருந்து அதை வாங்குவதற்கு ஏன் தயக்கம் காட்ட வேண்டும்? அதிலே அதிக கவனம் செலுத்தி முயற்சி செய்ய அரசு முயற்சி எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி இங்கே தகவல்கள் வந்திருக்கின்றன. உங்களுக்கு சரியாகச் சொல்ல வேண்டுமானால் 1974-75-ல் தான் மதுரை உதவி செட்டில்மெண்ட் அலுவலரால் இதற்கு முன்னால் இருந்த அரசின் காலத்தில், அரசுதான் கொடுத்திருக்கிறது என்று புகார் வந்திருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்கள் அந்தப் புகாரைக் கொடுத்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வரஞ்சிபுரம் பசுபதி ஈஸ்வரர் ஆலயத் திருப்பணி

*வினா எண். 828 : திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் 'கள்ளக்குறிச்சி வட்டம்' வரஞ்சிபுரம் கிராமத்தில் இருக்கும் சோழர் ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட பசுபதி ஈஸ்வரர் ஆலயத்திற்கு திருப்பணி செய்யக் கோரி அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) & (ஆ) தென்னாற்காடு மாவட்டம் 'கள்ளக்குறிச்சி வட்டம்' வரஞ்சிபுரம் கிராமத்தில் இருக்கும் பசுபதி ஈஸ்வரர் ஆலயத்திற்கு திருப்பணி செய்யக் கோரி, அரசுக்கு கோரிக்கை ஏதும் வரவில்லை. இருப்பினும் தேவையான திருப்பணி வேலைகளைச் செய்ய பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமித்த பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

1979 ஏப்ரல் 26]

[முற்பகல் 9-10]

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, சோழர் காலத்தைப் பற்றிய.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சோழர் காலத்தில் கட்டப்பட்ட ஒரு குறிப்பிட்ட கோவிலைப் பற்றியது. மன்னார் குடியைச் சேர்ந்தது அல்ல. உட்காருங்கள்.

தமிழக சுற்றுலா மையங்கள் குறித்து விளம்பரம்

*வினா எண் 829 — திரு. என். லட்சுமிநாராயணன் : மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் வெளிநாட்டுப்பயணிகளை கவரத்தக்க வகையில் தமிழக சுற்றுலா மையங்களைப்பற்றி என்னென்ன வழிகளில் வெளிநாடுகளில் பிரச்சாரமும் விளம்பரமும் செய்யப் பட்டுள்ளன?

(ஆ) அத்தகைய விளம்பரங்களால் எந்த அளவிற்குத் தமிழகத்தில் வெளிநாட்டுப் பயணிகளின் வருகை அதிகரித் துள்ளது?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) 1978-79-ல் சுற்றுலாப் பயணிகளை கவரத்தக்க வகையில் தமிழ்நாடு சுற்றுலா மையங்களைப் பற்றி பலவண்ணச் சிறப்பு வெளியீடு ஒன்றும், பலவண்ண சுவரொட்டிகள் 8 வகை களும் வெளியிடப்பட்டது. அவைகள் வெளிநாடுகளுக்கு அனுப் பப்பட்டன. இது தவிர வெளிநாட்டு செய்தித்தாள்களில் விளம் பரமும் கொடுக்கப்பட்டது. தமிழகம் வந்த வெளிநாட்டுப் பயண முகவர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் தக்க முறையில் வரவேற்று உபசரித்து அனுப்பப்பட்டனர்.

(ஆ) இத்தகைய விளம்பரங்களாலும் இந்திய அரசு மேற் கொள்ளும் முயற்சிகளாலும் சென்னை மாநகரிலுள்ள ஓட்டல்கள் பயணமுகவர்கள் ஆகியோர் மேற்கொள்ளும் முயற்சிகளாலும் தமிழகம் வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனலாம். 1978 ஆம் ஆண்டில் 1977 ஆம் ஆண்டைவிட சுமார் 36,725 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகம் தமிழகம் வந்துள்ளனர்.